Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Tholkappiyam in Psychological Perspective

**A. Alphonsa,** Research Scholar of Tamil, Kanchi Mamunivar Govt Institute For Post Graduate Studies and Research, Affilated With Pondicherry University, Puducherry – 605008.
**Dr. Vel. Karthikeyan,** Assistant Professor of Tamil, Kanchi Mamunivar Govt Institute For Post Graduate Studies and Research, Affilated With Pondicherry University, Puducherry – 605008.
**ORCiD: https://orcid.org/0000-0001-8817-7027**
**DOI: 10.5281/zenodo.7312380**

## Abstract

*The role of language in the development and progress of human civilization is significant. Different languages appeared according to the land structure in which man lived. The characteristics of language differ according to human use such as spoken language and written language. Tamil is a language olden than time a young language that renews itself with time. "Tholkappiyam" was the first grammar book available in Tamil language. It consists of three categories namely letter, word, Meaning (Morality of human life). It covers basic elements of various disciplines like grammar, literature, biology, science, linguistics, numerarcy, psychology. This article examines Tholkappiyam writing from the perspective of human intelligence.*

**Keywords:** Tholkappiyam, writing, ability, thinking, feeling

## References

[1] Ilambooranam. *Tholkappiyam-Eluttatikkaram.* The South Indian Saiva Siddhanta Works Publishing Society, Chennai, 12th Edition-2000.
[2] Thambirajah, M.S. *Mananooykalum Manakkoolaarukalum*. Kalachuvadu Publications, Nagercoil, Second Edition - 2017.
[3] Jean Lawrence. S. *Tholkappiya Ilakkana Moliyial Kotpatukal.* International Institute of Tamil Studies, Chennai, First Edition - 2001.
[4] Nagarajan. *Educational Psychology*. Sriram Publications, Chennai, First Edition-2021.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# உளத்திறன்கள் நோக்கில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

**ஆ. அல்போன்சா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காஞ்சிமாமுனிவர் அரசினர் சட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, புதுச்சேரி – 605008.
**முனைவர் வேல். கார்த்திகேயன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, காஞ்சிமாமுனிவர் அரசினர் சட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, புதுச்சேரி – 605008.
**ORCiD: https://orcid.org/0000-0001-8817-7027**
**DOI: 10.5281/zenodo.7312380**

## ஆய்வுச்சுருக்கம்

*மனிதர் நாகரிகத்தில் வளர்ந்து முன்னேற்றம் அடைந்ததில் மொழியின் பங்கு குறிப்பிடத்தக்கது. மனிதர் வாழ்ந்த நில அமைப்பிற்கு ஏற்ப பல்வேறு மொழிகள் தோன்றின. பேச்சு மொழி, எழுத்து மொழி என மனிதர் பயன்பாட்டிற்கு ஏற்ப மொழியின் தன்மைகள் வேறுபடுகின்றன. தமிழ்மொழி காலத்தால் மூத்தமொழி, காலத்திற்கு ஏற்ப தன்னை புதுப்பித்து மிளிர்கின்ற இளமை மொழி. தமிழ்மொழியில் கிடைத்த முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பகுப்புகளைக் கொண்டது. இலக்கணவியல், இலக்கியவியல், வாழ்வியல், அறிவியல், மொழியியல், எண்ணியல், உளவியல் போன்ற பல்துறைகளுக்குரிய அடிப்படை கூறுகளை உள்ளடக்கியுள்ளது. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை மனிதர் உளத்திறன்களின் நோக்கில் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.*

**திறவுச் சொற்கள் :** *தொல்காப்பியம்*, எழுத்து, திறன், சிந்தனை, உணர்வு

## முன்னுரை

என்றுமுள தென்தமிழ் எனப் போற்றுதற்குரிய செம்மொழித் தமிழ்மொழி. தமிழின் இலக்கண, இலக்கியக் கட்டமைப்பை உருவாக்கியதில் தொல்காப்பியத்திற்கு முக்கியப் பங்கு உண்டு. தொல்காப்பிய எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களில் தமிழ் மொழியின் எழுத்திலக்கணத்தை வரையறுக்கின்றது. எழுத்திலக்கணத்தில் காணப்படுகின்ற தமிழர் உளச்செயற்திறன்களை உளவியல் அணுகுமுறையில் வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

## சிந்தித்தல் திறன்

மனிதர் தனது எண்ணங்களையும், கருத்துகளையும் வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்ற கருவியே மொழி. மொழி மனிதர் உணர்வுகளின் வெளிப்பாடு. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் தமிழ் பேச்சொலிகளைக் கேட்டு ஆராய்ந்து உணர்ந்து, பேச்சொலிகளுக்கு வடிவம் கொடுத்து தமிழ் நெடுங்கணக்கு என்கின்ற வரிசை அமைப்புக்குள் வகைப்படுத்தியுள்ளனர். இதனை,

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**எழுத்தெனப் படுவ**

**அகர முதல னகர இறுவாய்**

**முப்பஃதென்ப**

**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே (தொல்.எழுத்.நூ.மரபு.1)**

எனத் தொல்காப்பியம் கூறியுள்ளது. இது தமிழர்களின் மொழி பற்றிய சிந்தனையின் வெளிப்பாடு எனலாம். மனிதர் வெளிப்படுத்திய ஒலிகளை ஆராய்ந்து சிந்தித்து அதன் உச்சரிப்பு, பிறப்பிடம், பயன்படும் விகிதத்தினைக் கருத்தில் கொண்டு பேச்சொலிகளுக்கு வடிவம் கொடுத்து உயிர்,மெய், உயிர்மெய், சார்பு எனப் பாகுபடுத்தி வழங்கியுள்ளனர். இவை தமிழரின் அறிதிறன் ஆற்றல் சிந்தனையின் வெளிப்பாடு.

**மனிதனின் செயல்பாடுகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுபவை உணர்ச்சி (அ) உணர்வெழுச்சி (emotions), அறிதிறன் (அ) அறியும் ஆற்றல் (congnition), செயல் (அ) நடத்தை ஆகியவையே. இம்மூன்றும் மூளையின் உயர்மட்ட செயல்பாடுகளாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலான ஆராய்ச்சி செய்யப்பட்டவையும் இவைகளே. இதில் அறிதிறன் என்பது கவனம் செலுத்துவது (Attention), ஐம்புலன்களால் பெறப்படும் புலனறிவு (Perception), நினைவாற்றல் (Memory). கற்றல் (learning), காரண ஆய்வு, சிந்தித்தல் (thinking), பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுவது (Problem solving) போன்ற மனதின் பல இயக்கங்களை உள்ளடக்கும்" (மன.நோய்.மன.கோளாறு.ப.17)**

மூளையின் செயல்பாடுகளில் கற்றல், சிந்தித்தல் போன்ற அறிதிறன் செயல்பாடுகள் அடிப்படையாக உள்ளன. தமிழ் பேச்சொலிகளைத் தொகுத்து வரி வடிவம் கொடுத்து எழுத்து வகைகளாய் நெறிப்படுத்தியமை தமிழரின் அறிதிறன் சிந்தனை வெளிப்பாட்டின் அடிப்படையாக அமைகின்றது.

**எழுத்தொலிகளின் கால அளவு**

தமிழ் எழுத்துக்களை சரியான அளவில ஒலிக்க ஓர் அளவீட்டினைத் தமிழர் வகுத்தளித்துள்ளனர்.

**கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை**

**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே (தொல்.எழுத்.நூ.மரபு.7)**

இந்நூற்பாவிற்கு உரை வகுத்த இளம்பூரணர் ஏழுவகை அளவினுள் கண்ணிமைத்தல் சார்த்தியளத்தல் வகையைச் சார்ந்தது என்கிறார். பலவகை அளவீடுகளை தமிழர் பயன்படுத்தியுள்ளனர். மனிதனின் இயல்பான கண்ணிமைத்தல் செயலையும், கை நொடிக்கப்படுவதால் எழுகின்ற ஓசையினையும் எழுத்துகளை உச்சரிப்பதற்குரிய கால அளவான "மாத்திரை" ஆக வரையைறுத்து பயன்படுத்திய நுட்பத்திறன் தமிழர் மொழிஅறிதிறன் ஆற்றலைக் காட்டுகின்றது.

**அறிவியல் அறிவுத்திறன்**

தமிழர்கள் அறிவியல் அறிவுடன் தமிழ்மொழியைக் கையாண்டுள்ளனர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவான தொல்காப்பிய எழுத்ததிகாரப் பிறப்பியலில் எழுத்துகளின் பிறப்பு முறைக் குறித்து தொல்காப்பியர் கூறிய விளக்கம் இன்றைய மொழியியலாளர் கூறுகின்ற எழுத்துகளின் பிறப்பு முறையுடன் ஒத்தமைகின்றது.

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**…பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல**
**திறப்படத் தெரியும் காட்சி யான (தொல்.எழுத்.பிறப்.1)**

தமிழ் எழுத்துக்களின் பிறப்பினை ஆராய்ந்து நோக்கும் போது கொப்பூழ் அடியிலிருந்து எழுகின்ற காற்றானது கண், தலை, மிடறு, நெஞ்சு போன்ற இடங்களில் நிலைப்பெற்று பல், இதழ், நாவு, மூக்கு, அண்ணம் போன்ற உறுப்புகளில் பொருந்தி உறழ்ச்சிப் பெற்று வெவ்வேறு எழுத்துகளாக வேறு, வேறு ஒலியுடன் தோன்றும்.

**நம் உடலில் பாதிக்கும் மேற்பட்ட பகுதி பேச்சொலிகளை உண்டாக்க உதவுகின்றன. அதாவது தலையிலிருந்து வயிறு வரை அமைந்துள்ள உறுப்புகள் பேச்சொலிகளை எழுப்ப உதவுகின்றன. அவைஒவ்வொன்றின் தொழிலுக்கும் ஏற்ப அவற்றை முறையே 1.உயிர்த்தலுக்கு உதவுவன. 2.குரல் எழுப்ப உதவுவன. 3.ஒலித்தலுக்கு உதவுவன என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை முறையே நெஞ்சு, தொண்டை, தலை ஆகும். அதாவது முதல் வகையைச் சேர்ந்த உறுப்புகள் நெஞ்சில் உள்ளன. இவை மூச்சுக்காற்று உள்ளும் புறமும் செல்ல உதவுகின்றன. இந்தக் காற்றின் மூலந்தான் நாம் பேச்சொலிகளை உண்டாக்குவதற்கான சக்தியைப் பெறுகின்றோம். இரண்டாம் வகையைச் சேர்ந்த உறுப்புகள் தொண்டையில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் பேச்சொலிகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட அடிப்படை சக்தியைக் கொடுக்கின்றன. மூன்றாம் வகையைச் சேர்ந்த உறுப்புகள் தலையில் அமைந்துள்ளன. இவை தாம் பேச்சுக்குழலின் வழியே செல்லும். காற்றில் அங்கமைந்த பேச்சுறுப்புகளினால் மாற்றங்களை விளைவித்துப் பலவகையான ஒலிகளை உருப்பெறச் செய்கின்றன. இக்கருத்து தற்கால ஒலியியலாளரின் கொள்கைகளோடு ஒத்திருப்பது மிகவும் வியப்பளிக்கிறது (தொல்.இல.மொழி.கோட்.ப.36)**

தொல்காப்பியத்தில் பேச்சுறுப்புகள் எட்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எழுத்துகளின் ஒலிப்புகளுக்குத் தொல்காப்பியம் முதன்மை தருகின்றது. இன்றைய மொழியியலாளர் பல்வேறு மொழிகளை ஆராய்ந்து வழங்குகின்ற எழுத்துக்களின் பிறப்பியல் விதிகளுக்கான அடிப்படைக் கூறுகள் தொல்காப்பியப் பிறப்பியலில் காணப்படுகின்றன. இவை தமிழரின் அறிவியல் அறிவுத்திறனைக் காட்டுகின்றன.

**நுண்ணறிவு வெளிப்பாடு**

ஒரு நபரிடம் காணப்படுகின்ற கூட்டு (அ) உலகளாவிய திறன். ஒரு வகையான மன ஆற்றல் என்றும் நுண்ணறிவு வரையறுக்கப்படுகின்றது. ஒருவர் திறன் மிக்கவராகச் செயல்புரிய நுண்ணறிவு காரணமாக உள்ளது. நுண்ணறிவு மனிதரின் கற்கும் திறன் அடிப்படையிலும் வரையறுக்கப்படுகின்றது.

**ஒருவர் பெறக்கூடிய கல்வி அறிவு அளவை வைத்து நுண்ணறிவு தீர்மானிக்கப்படுகிறது. நுண்ணறிவு மிக்கவன் மிக வேகமாகவும், அதிகமாகவும் கற்று தனது செயல்பாடுகளையும், அனுபவத்தையும் பெருக்கிக் கொள்கிறான்.**

**நுண்ணறிவு என்பது கருத்தியல் சிந்தனைத்திறன் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. அதாவது சொற்கள், எண்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கருத்தியல் (புலன்காட்சியின்றி) சிந்திக்கும் ஆற்றல் நுண்ணறிவு ஆகும் (கல்.உ.ள.பக்.127, 128)**

**உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்**
**...நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று**
**ஆயீ ரியல புணர்நிலைச் சுட்ட (தொல்.எழுத்.புணர்.108)**

என்றும்

**அவற்றுள்**
**நிறுத்த சொல்லின் ஈறு கெழுத்தோடு**
**குறித்துவரு கிளவி முதலெழுத் தியைய**
**...மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென**
**ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே (தொல்.எழுத்.புணர்.109)**

நிலைமொழி, வருமொழி என்னும் இரண்டு மொழிகள் புணர்கின்ற பொழுது. நிலைமொழியின் இறுதி எழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் சேர்தலை விளக்குவது புணரியல். இரு எழுத்துகளிடையே நிகழ்கின்ற மாற்றங்கள், எவ்வெழுத்துடன் எவ்வெழுத்து இணையும், இணையாது என்பது நுட்பமாக ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவை தமிழரின் எழுத்திலக்கண நுண்ணறிவினை வெளிப்படுத்துகின்றது.

**எண்ணியல் திறன்**

தொல்காப்பியத்தில் எண்கள் பற்றிய நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. அன்றைய தமிழர் எண்கள் மற்றும் எண்களின் பயன்பாடு சார்ந்த செயல்களில் எண்களைச் சிறப்பாக கையாண்ட திறன் எழுத்ததிகாரத்து நூற்பாக்களில் வெளிப்படுகின்றன. இதன் வழி தமிழரிடத்தில் எண்ணியல் அறிவும், திறனும் இருந்துள்ளமை தெளிவாகின்றது.

**உயிரும் புள்ளியும் இறுதியாகி**
**அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**

**தத்தங் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வருஉங் காலந் தோன்றின்**
**ஒத்த தென்ப ஏயென் சாரியை (தொல்.எழுத்.தொ.மரபு.165)**

சாரியை பற்றிய விளக்கத்தில் எண்கள், அளவுப்பெயர், நிறைப்பெயர் போன்ற சொற்கள் புலப்படுகின்றன. இதன் மூலம் எண்களை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகள் தொல்காப்பிய இலக்கண கால தமிழரிடத்தில் காணப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

**தொல்காப்பியரின் தனித்திறன்கள்**

“தொல்காப்பியம்” இலக்கண நூலின் ஆசிரியர் தொல்காப்பியர். தொல்காப்பியர் தமிழ்மொழியினை நன்கு கற்று தெளிந்து, தமக்கு முன்பு வாழ்ந்த சான்றோர் அருளிய நூல்களையும், தமது காலத்து மொழி இலக்கணங்களையும் ஆராய்ந்து உணர்ந்து, நிறைந்த அறிவுக்கூர்மையுடன் தொல்காப்பிய இலக்கண நூலைப் படைத்துள்ளார். தொல்காப்பியரின் எளிமை, ஒத்தஅமைப்பு, மாட்டேறு, எதுகை, மோனை, சொற்கள் மீட்சி போன்ற உளத்திறன்கள் வெளிப்படுகின்றன.

**ஆகார இறுதி அகர இயற்றே (தொல்.எழுத்.உயிர்.ம.222)**
**ஈகார இறுதி ஆகார இயற்றே (மேலது.250)**
**உகர இறுதி அகர இயற்றே (மேலது.255)**
**ஊகார இறுதி ஆகார இயற்றே (மேலது.265)**
**ஏகார இறுதி ஊகார இயற்றே (மேலது.275)**

இவற்றில் தொல்காப்பியரின் மாட்டேறு திறன் வெளிப்படுகின்றது. ஒரு கருத்தினை விளக்கும் போது அதனுடன் தொடர்புடைய கருத்தை இணைத்து, இணைத்து விளக்குவது மாட்டேறு எனப்படும். இவ்வுத்தி மூலம் கற்றதை நினைவில் நிறுத்தும் திறனும், ஒரு கருத்துடன் மற்றொரு கருத்தினைத் தொடர்புப்படுத்திப் பார்க்கும் திறனும் மேம்படும்.

**முடிவுரை**

**உளத்திறன்கள் நோக்கில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம்** இக்கட்டுரையில் எழுத்திலக்கணத்துக்குள் காணப்படுகின்ற தமிழர் தம் உளத்திறன்கள் ஆராயப்பட்டன. தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று. பல்துறைக்குரிய அடிப்படைக் கூறுகளையும் தன்னுள் கொண்டுள்ள நூல். மனிதருக்கும் மொழிக்கும் உள்ள உறவுநிலையானது பிரிக்க இயலாதது. மனித மனநிலை அவன் பேசுகின்ற மொழியிலும் வெளிப்படும். எழுத்திலக்கண உருவாக்கத்தில் ஒவ்வொரு எழுத்தியல் கருத்துக்களையும் வெளிப்படுத்த எந்தெந்த உளத்திறன்கள் பயன்பட்டுள்ளன என்பதனை தொடக்க நிலையில் மட்டுமே இக்கட்டுரை விளக்கியுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம் எழுத்ததிகாரம்.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,

சென்னை, 12வது பதிப்பு - 2000.

[2] தம்பிராஜா எம்.எஸ். *மனநோய்களும் மனக்கோளாறுகளும்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், இரண்டாம் பதிப்பு - 2017

[3] ஜீன் லாரன்ஸ் செ. *தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு - 2001.

[4] நாகராஜன்.கி. *கல்வி உளவியல்.* ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.